முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் – 25/2017

**பிரதிவாதி தரப்பு சாட்சி–2 வடிவேல் –** திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 24.02.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**வாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். யார் இவ்வழக்கை யாருக்கு எதிராக தாக்கல் செய்துள்ளது என்றால் தனலெட்சுமி, இளையராணிக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார். நல்லபெருமாள் இவ்வழக்கின் தரப்பினரா என்றால், தரப்பினர்தான், அவர் தற்போது இறந்துவிட்டார். தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால், பண்ணப்பட்டி கிராமம், சர்வே எண் 710/4. நான் 2 ம் பிரதிவாதியின் கணவர் என்றால் சரிதான். எங்கள் திருமணம் காதல் திருமணம் என்றால் சரிதான். எங்கள் திருமணம் 2009 ல் நடந்தது. திருமணத்திற்கு பிறகு ஒரு வருடம் திருப்பூரில் வசித்தோம். பின்னிட்டு உடையாப்பட்டியில் வசித்து வருகிறோம். நாங்கள் கரூரில் குடியிருந்தேனா என்றால், ஒரு வருடம் குழந்தைகளின் படிப்பிற்காக 2023 ல் குடியிருந்தோம். பின்னிட்டு எனது குழந்தையை தரகம்பட்டி, கூடலூரில் சேர்த்துவிட்டேன்.

2) மற்றொரு குழந்தை ஆந்திராவில் படிக்கிறது. நான் தற்போது தரகம்பட்டியில் குடியிருக்கிறேன் என்றால் சரிதான். தாவா சொத்து எனது மனைவிக்கு எவ்வாறு பாத்தியம் என்றால், எனது மனைவியின் தகப்பனார் 1958 ல் கிரையம் வாங்கி, 2016 ம் வருடம் எனது மனைவி பெயருக்கு தான செட்டில்மென்ட் எழுதி கொடுத்த வகையில் பாத்தியம். 1958 ல் கிரையம் வாங்கிய ஆவணத்தில் உள்ள சொத்து விபரம் தெரியுமா என்றால் தெரியும். உடையாப்பட்டி மாரியம்மன் கோயில் அருகில், முத்தப்ப உடையார் நிலத்திற்கு மேற்கு, கிழமேல் தார்ரோட்டிற்கு தெற்கு, துரைசாமி நிலத்திற்கு கிழக்கு, பன்னீர் செல்வம் வீட்டிற்கு வடக்கில் கிழமேல் 40 அடி, தென்வடல் 85 அடி ஆகும்.

மேற்படி நிலத்தில் கூரை வீடு உள்ளது. 1958ம் வருட ஆவணத்தில் மொத்த நிலத்தின் அளவு போடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மேற்படி ஆவணத்தில் சர்வே எண் அல்லது பைமாஸ் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

3) மேற்படி ஆவணத்தின் அடிப்படையில்தான் எனது மனைவிக்கு 2016ம் வருடம் தான செட்டில்மென்ட் எழுதப்பட்டது என்றால் சரிதான். நான் தற்போது ஒப்பந்ததாரராக பணிபுரிகிறேன். ரியல் எஸ்டேட் தொழில் செய்தேனா என்றால் அவ்வப்போது செய்து வருகிறேன். பொதுவாக ஒரு நிலத்தை பதிவு செய்யும் முறை எனக்கு தெரியும் என்றால் தெரியும். ஒரு ஆவணத்தை கிரையம் செய்ய வேண்டும் என்றால் அதன் மூல ஆவணம் அவசியம் தேவை என்றால் சரிதான். மூல ஆவணத்தில் என்ன சொத்து விபரம் உள்ளதோ, அதைப் பொறுத்துதான் ஆவணம் வகை செய்ய முடியும் என்றால் சரிதான். ஆனால் நத்தம் வகைப்பாட்டில் அவ்வாறு வராது. நத்தம் நிலத்திற்கு பட்டா இருந்தால் போதுமானது. எனது மாமனார் பெயரில் உள்ள பட்டா எண் தெரியுமா என்றால் தெரியாது. எனது மனைவியின் தான செட்டில்மென்ட் ஆவணத்தில் உள்ள சொத்து விபரம் தெரியுமா என்றால் தெரியும்.

4) அய்யாகண்ணு நிலத்திற்கு மேற்கு, கிழமேல் தார்ரோட்டிற்கு தெற்கு, பன்னீர் செல்வம் நிலத்திற்கு வடக்கு, துரைசாமி நிலத்திற்கு கிழக்கு இதற்கிடையே 4800 சதுர அடி ஆகும். எனது மாமனார் கிரையம் வாங்கிய 1958 ஆவணத்தின் அடிப்படையில்தான் மேற்படி இடத்தை தான செட்டில்மென்ட் செய்தாரா என்றால் ஆமாம். 1958ம் ஆண்டு கிரைய ஆவணத்தில் முத்தப்ப உடையார் நிலம் உள்ளது என கண்டுள்ளது என்றால் சரிதான். முத்தப்ப உடையாரின் மகன் பெயர் என்னவென்றால் நச்சப்ப உடையார் மற்றும் அய்யாகண்ணு. முத்தப்ப உடையாரின் பேரன்தான் சுப்பிரமணி. சுப்பிரமணி மனைவிதான் இவ்வழக்கின் வாதி தனலெட்சுமி என்றால் சரிதான். 1958ம் ஆண்டிலேயே இவ்வழக்கின் வாதியான தனலெட்சுமியின் கணவரின் பாட்டா முத்தப்ப உடையாருக்கு நிலம் உள்ளது என்றால் சரிதான்.

5) 2016 தான செட்டில்மென்ட் ஆவணத்தில் பட்டா எண் 1041ன் படி பாத்தியப்பட்ட சொத்து என கண்டுள்ளதா என்றால் ஆமாம். பட்டா எண் 1041 என்பது வருவாய்துறையால் வழங்கப்படவில்லை என சாட்சியம் அளித்துள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியாது. சர்வே எண் 710/5 ஐ பொறுத்து கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் மற்றொரு வழக்கு நிலுவையில் உள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியும். சர்வே எண் 710/4 மற்றும் 710/5 தனித்தனி இடம் என்பது தெரியுமா என்றால் தற்போதுதான் தெரியும். தாவா சொத்திற்கான பட்டா என் மனைவி பெயரில் மாறியுள்ளதா என்றால், இவ்வழக்கு நிலுவையில் உள்ளதால் மாற்றப்படவில்லை. வருவாய்துறையில் பட்டா மாற்றம் கேட்டு மனு செய்தேனா என்றால் செய்தேன், அதை இவ்வழக்கில் தாக்கல் செய்தேனா என்றால் செய்யவில்லை. நான் சொல்வது தவறு என்றும், நான் அவ்வாறு எந்த மனுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

(வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**